இருப்பார்கள். ஆகவே, இதில் நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை. ஆகவே, அனைவரும் என் முகத்தைப் பார்க்கும்போதே எனக்கு மகிழ்ச்சி தெரிகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில், எல்லோரும் மிகுந்த சந்தோஷமாக இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களின் சந்தோஷத்தோடு என்னுடைய சந்தோஷத்தையும் இணைத்துக்கொள்கிறேன்.

7. அறிவிப்புகள்

(அ) சட்டமன்ற பத்திரிகையாளர்களுக்கு பேனா, குறிப்பேடுகள் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மேலும், ஒரு சிறிய அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை செய்தியாளர்கள் மாட அனுமதி சீட்டு வழங்கப்பட்டுள்ள செய்தியாளர்களுக்கு சட்டமன்றப் பேரவை செயலகத்தால் வழங்கப்பெறும் பேனா மற்றும் குறிப்பேடுகள் சட்டமுன்வடிவு பிரிவு 2–ல் இருந்து பெற்றுக்கொள்ளலாம் என்ற அறிவிப்பினை நான் செய்தியாளர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

6. மானியக் கோரிக்கைகள், 2017–2018, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 38–பொதுத் துறை

(ஆ) கோரிக்கை எண் 1–மாநிலச் சட்டமன்றம்

(இ) கோரிக்கை எண் 2–ஆளுநர் மற்றும் அமைச்சரவை

(ஈ) கோரிக்கை எண் 16–நிதித் துறை

(உ) கோரிக்கை எண் 35–பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

(ஊ) கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

(எ) கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*